விலைசதம் 10. தொலை பேசி 23411

# சுதந்திரன்
SUTANTIRAN

வ- ஆ 2001, வைகாசி 13உ புதன் (27-5-70) ற. அவ்வல் பிறை 20 — புத்தகம் 24 இதழ் 48

### தமிழ் காங்கிரசுக்கு அபசகுனம்!

# மேடை அறுந்து வீழ்ந்தது!

# எங்கும் இருள் சூழ்ந்தது!

## இருளோடு இருளானுர் பொன்னர்!
## கடைசிக் கூட்டத்தில் நடந்த சம்பவம்!

(யாழ் நிருபர்)

இன்று நடைபெறும் பொதுத்தேர்தலில் தமிழ் காங்கிரஸ் பூண்டோடு அழிந்து புதைகுழிக்கு போகப்போவது திண்ணம் என்பதை நேற்று முன்தினம் யாழ் முற்றவெளியில் நடைபெற்ற தமிழ் காங்கிரசின் இறுதிக்கூட்டத்தில் நடைபெற்ற எதிர்பாராத சம்பவம் எடுத்துக் காட்டி விட்டது.

சில நூறுபேரே கலந்து கொண்ட இக்கூட்டத்தின் இறுதிக்கட்டத்தில் எதிர்பாராதவிதமாக மேடை அறுந்து வீழ்ந்தது. திடீரென மின்சாரம் நின்று போய் மைதானம் எங்கும் இருள் சூழ்ந்தது—இருளோடு இருளாகி மெல்ல அங்கிருந்து நழுவினுர் தமிழ் காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலம்.

இச்சம்பவம் தமிழ் காங்கிரசுக்கு இன்றைய பொதுத் தேர்தலில் என்ன நிகழவிருக்கிறது என்பதை முன் கூட்டியே காட்டிய ஓர் அபசகுனம் என்றும் தமிழ் காங்கிரஸ் பூண்டோடு அழியப் போவதை இது எடுத்துக் காட்டிவிட்டதென்றும் மக்கள் பேசிக்கொள்கிறுர்கள்.

இச்சம்பவம் நடைபெற்ற பின்னர் தமிழ் காங்கிரஸ் தலைவர் தூக்கம்கூட பிடிக்காமல் அமைதி இழந்து இருக்கிறுராம்!

இம்மாதம் 25ந் திகதி (நேற்று முன்தினம்) அரசியற் கட்சிகள் யாவும் தமது இறுதி பிரசாரக் கூட்டத்தை நடத்தியது தெரிந்ததே. தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளில் இப்பிரசாரக் கூட்டங்களை நடத்திஞர்கள்! ஆனுல் தமிழ் காங்கிரஸ் யாவருக்கும் பொதுவான ஒரு கூட்டத்தை யாழ்முற்றவெளியில் நடத்தியது!

யாழ் தொகுதியில் திரு. மார்ட்டினை ஆதரித்து கரையூரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களைவிட குறைவானவர்ளே பொன்னர் கட்சி வடமாகாணம் முழுவதிலுமுள்ள சகல தொகுதிகளுக்கும் பொதுவாக வைத்த இப்பொதுக்கூட்டத்தில்கலந்து கொண்டனர்.

யாழ் முற்றவெளியில் கஞ்சிக்குப் பயறு போட்டது போல ஆங்காங்கே காணப்பட்ட சில நூறு பேர் முன் பொன்னம்பலமும் மற்றவர்களும் தமது வழமையான பல்லவியைப் பாடி முடித்தனர்.

மேடையில் நின்றுகொண்டே திரு. பொன்னம்பலம் தான் போட்டிருந்த மாலைகளை ஒவ்வொன்ருக கழற்றி பொதுமக்கள் மத்தியில் வீச அதே மாலைகள் மீண்டும்

(2-ம் பக்கம் பார்க்க)

## தமிழினம் தலைநிமிர்ந்துவாழ தமிழரசை தேர்ந்தெடுங்கள்!

### இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு தமிழக கம்யூனிஸ்ட் ஏடு 'சங்கொலி' வேண்டுகோள்!

தமிழ்பேசும் மக்கள் இன்று ஈழத்தில் மிகவும் நெருக்கடியான கட்டத்திலிருக்கிறுர்கள். தமிழர் கட்சிகளிடையே ஒற்றுமை இன்மையால், தமிழருக்குக்கிடைக்க வேண்டிய 'பல்கலைக் கழகம்' போன்றவற்றையும் பெறமுடியாமலிருக்கிறுர்கள். ஆட்சியாளரின் பிரித்தாளுங் கொள்கைக்குச் சில அரசியல் தலைவர்கள் உடந்தையாக இருக்கிறுர்கள். இதனுல் அரசாங்கம தமிழர் பிரச்சினைகளை இலகுவிற் தட்டிக் கழித்துக் கொண்டே வந்திருக்கிறது; வருகிறது.

இன்று ஈழத்தில் தமிழ் வாழ தமிழன் தலை நிமிர்ந்து நிற்கப் பல உரிமைகளைப் பெற்றுத் தந்து—தொடர்ந்து தமிழுக்காகப் போராடும் ஒரே கட்சிதிரு. சா ஜே. வே. செல்வநாயகம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழரசுக் கட்சி. சமஷ்டிக் கொள்கையை ஊன்று கோலாகக் கொண்ட அரசியற் கட்சி இன்று வடகிழக்கில் 12 மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டது தமிழரசுக் கட்சி.

ஈழத்துக் காந்தி என்றும் தந்தை செல்வா என்றும் தமிழ்ப் பெருங்குடி மக்களாற் போற்றப்படும் திரு செல்வநாயகம் அவர்கள், பதவி மோகமோ, அற்ப சலுகைகட்கோ தமிழரையோ, தனது கட்சியையோ பலியிடாதவர். ஆளுஞ் சிங்களக் கட்சிகளுடன் சேர்வதாகவிருந்தாலும் அன்னை தமிழைக் காக்கும் வண்ணமே சேர்கிறுர்; சேர்ந்திருந்தார்.

சிங்கள ஆட்சியாளரின் கெடு பிடிகளையும், இன்னல்களையும் அவ்வப்போது கண்டித்தும்—அமைதியான சாத்வீக முறையில் எதிர்ப்பைக் காட்டியும் தமிழர்களின் உரிமைகளைக் கட்டிக் காப்பது தமிழரசுக் கட்சியே.

(4 ம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்கள் செய்துள்ள முடிவு!

தமிழன் பூமியைத், தமிழன் மொழியைத், தமிழன் உரிமையைத் தட்டிப் பறிக்க எண்ணிய அந்நிய ஏகாதிபத்தியத்தை முட்டிய காளை பண்டார வன்னியன்! மூவேந்தர்க்கிளையோன்! வன்னி நாட்டு மாவேந்தன்! தமிழ் மறவன், அவன் ஆண்ட புனித பூமியிலே சிங்களத்துக்குச் சீலை தோய்க்கும் சிவசிதம்பரத்துக்கு வேலை என்ன? சீறிப் பாய்ந்தன் பண்டார வன்னியன்! சிதவசிதம்பரம் காக்கை வன்னியன! செந்தமிழன் பூமியிலே, சிங்களத்தைச், சிங்களவரை வரவேற்

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மத்திய தமிழ் வாக்காளர்கள் பீட்டர் கெனமனை ஆதரிக்கலாமா?
### கூடாது என்கிறுர் தமிழரசுப் பிரமுகர்!

(கொழும்பு நிருபர்)

கொழும்பு மத்திய தொகுதியில் வாழும் தமிழ் பேசும் வாக்காளர்கள் கம்யூனிஸ்ட் வேட்பாளரான திரு. பீட்டர்கெனமனை ஆதரிக்கக் கூடாது என்று தமிழரசுப் பிரமுகரொருவர் சுதந்திரன் நிருபரிடம் குறிப்பிட்டார்.

'தமிழர்கள் தன்னைத் தான் ஆதரிக்க வேண்டும் என்று திரு. கெனமன் விரும்புகிறுர். அவர் இப்படி எதிர்பார்ப்பது மிக மூட்டாள்தனமாகவே முடியும். அதற்குக் காரணங்கள் பல.

கம்யூனிஸ்ட் கட்சி இப்போது ஒரு இனவாதக் கட்சியாக மாறிவிட்டது. தமிழ்த் துவேசத்தை அக்கட்சிதான் வளர்க்கிறது.

தமிழ் மொழிச் சட்டத்தைக் கம்யூனிஸ்டுகள் கடுமையாக எதிர்த்தார்கள்.

தமிழ் மக்களுக்குச் சலுகைகள் வழங்கும் டட்லி-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தார்கள்.

கம்யூனிஸ்டுகளின்திட்டம் என்றும் ஒரே மொழி, ஒரே இனம் என்பதுதான். இக்கொள்கையால் தமிழர் சிங்களவராக மாறித்தான் ஆக வேண்டும்.

இதைத் திரு. கெனமன் பகிரங்கமாகவே கூறியுள்ளார்.

'பெரும்பான்மை இனத்தால் பேசப்படும்ஒருமொழி, சிறுபான்மையோரின் மொழியாக ஆகத்தான் வேண்டும். இதில் ஏதும்

(4 ம் பக்கம் பார்க்க)




## இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின்

# எண்ணம்

## வெற்றி நமதே!

இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் வாழ்விலே மிகப் பெரிய சோதனை நாள் இன்று!

ஐந்தாண்டுகளுக்கோர் முறை அவர்கள் எழுதும் பரீட்சை இன்று நடைபெறுகிறது!

ஆம். இன்று நடைபெறும் பொதுத் தேர்தல் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பெரிய சோதனையே!

தங்கள் எதிர்காலத்தை—தலைவிதியை— நிர்ணயிக்கும் மாபெரும் பரீட்சை யொன்றைத் தமிழ் பேசும் மக்கள் இன்று எழுதுகிறார்கள்.

1956ம் ஆண்டுக்குப் பின் கடந்த 14 ஆண்டுகளில் நடைபெற்ற நான்கு பரீட்சைகளில் வெற்றிகரமாக சித்தியடைந்த தமிழ் பேசும் மக்கள் இன்று என்ன செய்யப்போகிறார்கள்? சித்தியடையப் போகிறார்களா? அல்லது கோட்டைவிட்டுவிடப் போகிறார்களா என்பதை அகில உலகமும் கூர்ந்து நோக்கியபடி இருக்கிறது.

தமிழ் பேசும் மக்கள் கண்ணீரும் செந்நீரும் சிந்தி உயிர்த்தியாகம் செய்து—பல சிரிய தலைவர்களையும் தொண்டர்களையும் பலிகொடுத்து— சொத்து சுகங்களைப் பறிகொடுத்து—சிறைப்பட்டு. சித்திரவதைப்பட்டு, இனக்கலவரங்களுக்கும் காடைத்தனங்களுக்கும் அஞ்சாது வீரர்களாக—விவேகம் நிறைந்தவர்களாக கடந்த 14 ஆண்டுகளாக நடந்துவரும் விடுதலைப்பாதையில்—செல்வா காட்டும் தியாக வழியில் தொடர்ந்து முன்னேறிச் செல்லப் போகிறார்களா? அல்லது உள்ளம் சோர்ந்து, நம்பிக்கை இழந்து ஒற்றையாட்சிச் சிங்கள ஏகாதிபத்தியத்தை ஏற்று பெரும்பான்மைச் சிங்களவர்களின் நிரந்தர அடிமைளா என்ற நிலையை ஒப்புக்கொண்டு-அற்ப சலுகைகளுக்காகவும் சலாக்கியங்களுக்காகவும் விடுதலைப் பாதையிலிருந்துவிலகிச் சென்று தன்மானத்தையும் தமது மொழி பிரதேசம், தனித்துவம் யாவற்றையும் பறிகொடுத்து ஈற்றில் அழிந்தொழிந்துபோகப் போகிறார்களா?

இக்கேள்விக்குத்தான் தமிழ்பேசும் மக்கள் இன்று தங்கள் வாக்குச் சீட்டுக்களால் விடையளிக்க விருக்கிறார்கள்!

அடிமைத்தனத்தை ஒப்புக் கொள்ளப் போகிறோமா அல்லது சுதந்திரப் பாதையில் தொடர்ந்து சென்று நமது பிரதேசத்தையும் மொழி கலாசாரங்களையும் காப்பாற்றி நமக்கென்று ஒரு ஆட்சி அமைத்து தலை நிமிர்ந்து வாழப் போகிறோமா?

எத்தனை இழப்புக்கள் — இன்னல்கள் நேர்ந்தாலும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும்—உறுதி குலையாமல்— உணர்ச்சி குன்றாமல்—விடுதலைப் பாதையில் செல்வோம் வாருங்கள்! சுதந்திர மக்களாக சுயாதீனமுள்ள மக்களாக வாழ்வதே தமிழினத்தின் கொள்கை யென்பதை கட்சியின் சின்னமாகிய வீட்டுக்கு நேரே வாக்களித்து சிங்கள ஏகாதிபத்தியத்துக்கும் அகில உலகுக்கும் எடுத்துக் காட்டுங்கள் என்று அழைக்கிறது தமிழரசுக்கட்சி!

தமிழினம் சுதந்திரம்பெற்று, இழந்த உரிமைகளைமீட்டு தனது பிரதேசத்தில் தனது சொந்த ஆட்சியை நிறுவி மொழியையும், தனித்துவத்தையும் சாத்து தலை நிமிர்ந்து வாழவேண்டுமென்பதே உங்களின் இலட்சியமாக இருந்தால் தமிழரசு வேட்பாளர்களுக்கே வாக்களியுங்கள்!

இல்லை, அடிமைகளாக வாழ்ந்து அழிந்தொழிந்து போவோம்; அற்பசலுகைகளையும் பதவிகளையும் பெற்றுக்கொண்டு நம் எதிர்காலச் சந்ததிக்கு குழி தோண்டுவோம் என்று எந்தத் தமிழ் மகனாவது கருதினால் அவன் மாற்றுக் கட்சி வேட்பாளர்களுக்கோ; சுயேச்சைகளுக்கோ வாக்களிக்கட்டும்.

தமிழினமே நன்றாக சிந்தி!

வாக்குரிமை ஜனநாயகம் நமக்கு வழங்கியுள்ள ஈடு சொல்ல முடியாத பிறப்புரிமை!

கண்டிப்பாக மக்கள் பயன் படுத்தவேண்டிய மகோன்னதமான உரிமை இது!

ஐந்தாண்டுகளுக்கோர் முறை நமக்குக் கிடைக்கும் உரிமை இது!

இந்த உரிமையை, நமது மொழிகாக்க—நமது இனத்துக்காக—நமது கலாசாரத்துக்காக நமது தனித்துவத்தைக் காப்பதற்காக—நமது பிரதேசத்தைக் காப்பதற்காக—நமது விடுதலை உணர்ச்சியை எடுத்துக் காட்டுவதற்காகப் பயன்படுத்த வேண்டியது நமது இன்றியமையாக் கடமையல்லவா?

அந்தக் கடமையைத் தட்டாமல் தவறாமல் இன்று நிறைவேற்றுங்கள்! ஒவ்வொருவரும் தவறாமல் வாக்குச் சாவடிகளுக்கு சென்று வாக்களியுங்கள்!


ஈழத் தமிழினத்தின் கட்டுக் கோப்பையும், ஒற்றுமையையும், விடுதலை வேட்கையையும் அரசியல் தெளிவையும் இன்றைய பொதுத் தேர்தல் மூலம் நாட்டுக்கும் நானிலத்துக்கு[illegible] கள்!

அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கே[illegible]


# வெற்றி! வெற்றி! வெற்றி!

(3-ம் பக்கத் தொடர்ச்சி



பாளராவது கல்குடாவில் வெல்வதாவது! மாணிக்க வாசகரின் கரத்தில் கல்குடா மக்கள் தூக்கித்தர இருக்கும் மாணிக்க வெற்றியை இருந்து பாருங்களேன்! இப்பொழுதே மாலைகள் தயாராகிவிட்டன. பந்தல்கள் போடவும் நிறைகுடம் வைக்கவும் மக்கள் தயார்! கல்குடா தமிழரசு வாலிபரின் முகங்களெல்லாம் வெற்றிக்களிப்பு நகை இப்போதே படர்கிறதே!

### நேமி வெற்றி



திருமலை வழக்கமாக ஒவ்வொருமுறையும் செய்து வரும் காரியத்தை இம்முறையும் செய்ய தீர்மானித்துவிட்டது. 'நேமியின் வெற்றி நிச்சய வெற்றி'' என்றே எங்கும் பேசி மக்கள் ஆரவாரம் செய்கிறார்கள்! மாலைகள் சூட்டி மாவீரன் நேமிநாதனை மகிழ்விக்கும் அந்த மணிப்பொழுது சீக்கிரம் வராதா என்று ஆவலோடு திருமலை மக்கள் துடித்து நிற்கின்றனர். திருமலையின் நாலு திசைகளிலும் 'தமிழரசு வாழ்க' கோஷம் முழங்கி அதிர்ந்த வண்ணம் இருப்பதை காண்கிறோம்!

### நாகாவெற்றி!



நல்லூர் தமிழ் மன்னர்களின் பழம் பெரும் ராஜதானி. நல்லூரிலிருந்து ஆண்ட மன்னர்கள் தமிழுக்காகவும், தமிழர்க்காவும். தமிழ் அரசுக்காகவுமே வாழ்ந்து தமிழ்ப் பிரதேசங்களை எதிரிகளிடம் சிக்கிவிடாமற் காத்திருக்கின்றனர். அப்படியான தொகுதி தமிழரசுக் கோட்டையாகவே இருப்பதுதான் தமிழர்க்கு வெற்றி என்று நல்லூர் பெரியவர்களும், இளைஞர்களும் ஏகோபித்த வெற்றிகொண்டாடும் நாள் மே 28. இரும்பு மனிதர் வெல்லாமல் வேறு யார் வெல்லப் போகின்றார்கள். பாராளுமன்றத்தில் நிச்சயம் இருக்கவேண்டியவர் அவர் என்பதால் இப்போதே தமிழரசு வீடுகள் தோறும் வெற்றி வெற்றி

என்ற முழக்கமே கேட்கிறது!

ஆமாம்! வெற்றி! வெற்றி! எங்கும் தமிழரசின் வெற்றி என்பதே பேச்சு! தமிழரின் ஒரே குரல் சமஷ்டி என்பதே உறுதியாச்சு!


### செல்ல வெற்றி !

வவுனியா தமிழ்ப் பகுதிகளிலேயே ஒரு முக்கிய கேந்திர தானமல்லவா? அதில் நிச்சயம் தமிழரசுக் கட்சி பிரதிநிதித்துவம் வகிப்பது தவிர்க்க முடியாததாகி விட்



டதனால் இதோ செல்லத்தம்பு வெல்கிறார். இது தவிர்க்க முடியாத வெற்றி. தமிழரசின மாபெரும் வெற்றி! செல்லத்தம்புவின் அனுபவத்தில், அரசியல் கொள்கைகளின், வெற்றி. மக்கள் குதூகலித்துக் கொண்டாடப்போகும் மகத்தான வெற்றி!

### உதுமான் வெற்றி



கல்முனையில் தமிழுணர்ச்சி மிக்க—அமைதியும் அடக்கமும் நிரம்பிய—எல்லோரோடும் இனிமையாகப் பழகுகின்ற உதுமானை வெற்றிபெறச் செய்வதென்று கல்முனை வாழ் பெரும்பான்மையான இஸ்லாமியர்களும் இந்துக்களும் கிறித்தவர்களும் முடிவு செய்துவிட்டார்கள்!


''உதுமான் தங்கமான ஒரு பையன். அவனுடைய தூய்மையான உள்ளமே அவனை வெற்றி பெறவைக்கும்'' என்று. ஒரு கல்முனையைச் சேர்ந்த ஒரு வயோதிபர் உணர்ச்சியோடு கூறினார்!

உதுமான் வெற்றி பற்றியே கல்முனையில் இப்போது எந்த மூலையிலும் பேச்சு! ஆம் உதுமான் உண்மையில் வெல்வான்!

### தங்க வெற்றி



மூதூர் தமிழ் பேசும் மக்களின் முதுபெரும் ஊர்! சிங்களக் குடியேற்றத்தால பாதி சீரழிந்த ஊர். விடு



### தலைவர் வெற்றி

பட்டிருப்பு என்றால் பட்டாளத்தை விரட்டி அடித்த துறை நீலாவணையைக் கொண்ட வீரத் தமிழர் தொகுதி என்றுதான் பொருள்! தமிழரசுக் கட்சியின் தலைவர் இராசமாணிக்கத்தை விழுத்த யு. என். பி. அரசாங்கத்தின் 'ஜீப்' வண்டிகள் கூட ஓடி உழைத்த தொகுதி—பாவம் யு. என். பி.காரர்கள் இந்தத் தொகுதியில் இப்போதே தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டுநடக்கத்தொடங்கி விட்டார்கள். வெற்றி இராசமாணிக்கத்துக்கே என்று ஒவ்வொரு வீட்டு முற்றத்திலும் மக்கள் கூடிப் பேசி மகிழ்கிறார்கள்! வெற்றி மாமகளே! நீ கொடுத்து வைத்தாயடி! தமிழரசுக் கட்சித் தலைமகனை நீ மகிழ்விக்க இன்னும் சில பொழுதுகளே உண்டு; பொறுத்திரு!

வார்களா தமிழ் மக்கள்? தங்கத்துரைக்கே வெற்றி தருவதென்று முடிவுசெய்து விட்டார்கள் மூதூரிலே! வெற்றி வாகை சூடப் போகும் வீரா! தங்கத்துரையே! தமிழரசு வாலிப முன்னணித் தலைவா! நீ வெல்வது எங்களுக்கெல்லாம் எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? தமிழரசில் ஓடிப் போகும் புதிய இரத்தமே! உன் வெற்றி எங்களுக்கு ஒரு புதுத்தெம்புதானடா!

### மேடை அறுந்து......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேடையின் பின்புற வழியாகப் போய் ஜீ. ஜீ. யின் கழுத்தில் புதிய மாலையாக விழ, மீண்டும் அவற்றைக் கழற்றி பொன்னர் வீச, இப்படியே வழக்கமான திருவிளையாடலும் நடைபெற்றது.


கூட்ட இறுதியில் எதிர்பாராத அச்சம்பவம் நிகழ்ந்தது. திடீரென திரு. பொன்னம்பலம் உட்கார்ந்திருந்த மேடை அறுந்து விழுந்தது; திகைத்து தடுமாறினர் பொன்னரும் அவரது கூட்டத்தினரும்! அவர்கள் தடுமாறிக் கொண்டிருக்கும் போதே மின்சாரமும் நின்றது; லைட்டுகளும் அணைந்தன. எங்கும் இருள் ஆழ்ந்தது. மக்கள் மெல்ல மெல்ல அங்கிருந்து கழரத் தொடங்கினர்.

மேடை அறுந்து லைட் நின்று இருள் சூழ்ந்ததும், திரு. பொன்னரைச் சுற், ஐந்தாறு ஆதரவாளர் மொய்த்தனர். திகைத்துப் போய்நின்ற பொன்னர், அந்த ஐந்தாறு ஆதரவாளர்கள் புடைசூழ இருளோடு இருளாகச் சென்று மறைந்தார்.

இச்சம்பவம் தமிழ் காங்கிரஸ் இன்றைய பொதுத் தேர்தலில் வேரோடு சாயப் போவதற்கு ஒரு முன்னறிவித்தல் என்று தமிழ் காங்கிரசினரே தங்களுக்குள் இப்போது பேசிக்கொள்கின்றனராம்—தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களின் முகம் இப்போது வாடிவதங்கிப்போய் விட்டது—

# வெற்றி! வெற்றி! வெற்றி!

## எங்கும் தமிழரசு என்பதே பேச்சு! எல்லோரும் வெல்வர் என்பது உறுதியாச்சு!



தந்தை வெற்றி !



காங்கேசன்துறை மக்கள் தேர்தலைப்பற்றி செய்தது என்றோ கொண்ட முடிவு. இளமைக் காலத்திலேயே தன் மக்களுக்காகப் பதவியைத் துறந்த, தமிழுக்காகச் சிறை சென்ற, நாட்டிற்காக இனவெறியரிடம் துன்பங்களை அனுபவிக்க—தமிழ் பேசும் மக்களனைவரும் பூரண சமத்துவ சமஉரிமைக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் தந்தையையே வாகை சூடச் செய்ய வேண்டும் என்பதுதான் பொதுமக்களின் எண்ணம். ஏனெனில் தந்தையின் வெற்றி தனிப்பட்டவரின் வெற்றியல்ல. அது ஒரு விடுதலை இயக்கத்தின் வெற்றி. ஈழத் தமிழரின் வெற்றி. அவ்வெற்றியைக் கேட்க அகில உலகமும் தயாராயிருக்கிறது. அதோ வெற்றி காங்கேசன்துறை மக்கள் கூறுகிறார்கள்!

அமிர்த வெற்றி !



வட்டுக்கோட்டை சைக் கொட்டிச் சிரிக்கிறது எக்காளமிடுகிறது, 'தளபதி' அமிர்தலிங்கத்துக்கு வாழ்த்துக் கூற. தளபதியின் தர்பாரில் வீரர்கள் ஏராளம் ஏராளம். அவர்கள் கண்டகளமும் அப்படியே. எதிரிகள் கண்டு நடுங்கும் அமிர்தலிங்கச் சிங்கத்தை அனுப்பாமல் சிறு நரிகளையா அனுப்புவது என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் அதோ தமிழரின் இளைய தலைவனுக்குத் தெருவெலாம் பூரண கும்பங்கள். இளைஞர் கும்மாளமிடுகின்றனர். ஏனெனில் இது அவர்களின் வெற்றி.

நவ வெற்றி !



சாவகச்சேரியிலே இன்னொருவன் வெல்வதா? ஐயாவை இழந்து, நடராசாவை இழந்து தமிழின வாழ்வின் பாதையைக் கண்ணீரோடு பார்த்து நிற்கும் நவரத்தினம் வெல்வதன்றோ எமக்குப் பெருமை. அதோ அந்த கம்பீர முகத்தில் தெரியும் புன்னகை எதனால் வெற்றியாலல்ல, தன் இதயத்தை வென்று விட்ட தன் ஆதரவாளர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு புதிய திட்டங்கள் வகுக்கும் எண்ணத்தால் தான் எத்தனையாயிரம் வாக்குகள் சொல்லவே வேண்டாம்! எதிரிகள் பாவம் மூர்ச்சித்துப் போகாதிருக்கட்டும்.

இரத்தின வெற்றி !



பன்னூறு ஆண்டுகளாகத் தமிழ் இளமையோடிருக்கும் போது, அவள் தந்த கலைச் செல்வங்களும் கட்டழகோடிருக்கும் போது இவையத்தனையும் காக்க வந்த கா. பொ. இரத்தினத்தாரின் வெற்றிஇதோ கவர்ச்சிசிரிப்பைச் சிந்துகிறது? பண்டிதரே வருக! தமிழறிஞரே வருக! தமிழ் வீரரே வருக! ஊர் காக்கும் துறையில் தமிழ் காக்க வெற்றிபெறும் இரத்தினமே உமது வெற்றிக்குத்தான் ஈடு இணை ஏது?

துரை வெற்றி !



ஏ! வெறி கொண்ட சிங்கள இராணுவமே எங்கள் துரைரத்தினத்தை துவம்சம் செய்ய வந்து நீயே தோற்றுப் போனாய். பாவம் இந்த அரசியல் பித்தலாட்டக்காரர்களாலா அவரை வெல்ல முடியும். இதோ பார் துரைரத்தினத்தின் வெற்றியை. மாபெரும் வெற்றி. இராணுவமே நடுங்கும் வெற்றி: தொடர்ந்து வல்வெட்டித்துறை மக்களுக்காக, பருத்தித்துறை மக்களுக்காக அதே சிம்மக் குரல் பாராளுமன்றத்தில் தினம் தினம் கேட்கப் போகின்றதே. அது எவரின் வெற்றி? தமிழரசின் வெற்றியல்லவா? ஆமாம் மக்களின் வெற்றி.



கதிர் வெற்றி!

கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் அவர்கள் பிரதிநிதித்துவம் வகித்த தொகுதி என்றென்றும் ஒரு இலட்சிய வெறி கொண்டது. அந்த மாவீரர் தமிழர்களின் எதிர்கால கௌரவமிக்க வாழ்வுக்காக என்னென்ன கனவுகள் கண்டாரோ, தமிழரில் பாகுபாடில்லாமல் எல்லோரும் ஓர் குலமாக வாழ எப்படியெல்லாம் திட்டமிட்டாரோ அதே இலட்சியக் கொள்கைகளோடுதான் கோப்பாய் மக்கள் இன்னமும் இருக்கின்றார்கள். எனவேதான் கதிரவேற் பிள்ளையின் வெற்றியை மிகப் பெரிதாகக் கொண்டாடத் திட்டமிட்டு விட்டார்கள்.

---

இன்று பொதுத் தேர்தல் 145 தொகுதிகளும் மிகுந்த நெஞ்சத்துடிப்போடு இருக்கின்றன. யாருக்கு வெற்றி என்ற நிலையில். ஆனால் 19 தொகுதிகளில் 19 வேட்பாளர்கள் மட்டும் நிதானத்தோடு இருக்கின்றார்கள். அவர்களுக்கு இன்று அமைதி. முதற்காரணம் அவர்கள் தமிழரசு வாதிகள். இரண்டாவது சமஷ்டிக் கொள்கைகளை மக்கள் பூரணமாக அறிந்து தமிழரசையே தெரிவுசெய்ய முடிவு செய்துவிட்டது நிச்சயமாகிவிட்டது. மூன்றாவது சும்மை மீண்டும் தெரிவு செய்யச் சங்கல்பம் பூண்டுவிட்ட தமிழ்பேசும் மக்களின் சுபிட்ச வாழ்வுக்கு ஆக்கபூர்வமாக செய்ய வேண்டியதைப் பற்றிய அரசியல் சிந்தனை.

இதோ வெற்றி! தமிழரசின் வெற்றி! சமஷ்டியின் வெற்றி! தமிழின் வெற்றி! தமிழ்ச் சந்ததியின் வெற்றி! புதிய சகாப்தத்தின் வெற்றி! வெற்றி மேல் வெற்றி!

---

தர்ம வெற்றி !



தர்மம் என்றுமே தோற்றதில்லை. சண்டிலிப்பாயில் மாரிசன்களுக்கு நடந்ததென்ன? நுணலும் தன் வாயால் கெடும். ஒரு சின்னக் கூட்டத்தில் அத்தனை கோணங்கித்தனம் பண்ணியவர் போவதை விட பாராளுமன்றத்தில் வாதாடி உடுவில் தொகுதியின் வளர்ச்சி எவ்வளவோ உதவி செய்த தர்மலிங்கமே மீண்டும் வருவது ஆயிரம் தடவை மேல் என்பதால் அதோ மானிப்பாயில், நவாலியில், சங்குவேலியில், சுன்னாகத்தில் எங்கும் 'இலங்கையர்' என்ற வெற்றி வீரருக்கு வரவேற்புக் கொடிகள்.

மார்ட்டின் வெற்றி !



கடந்த தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசு வேட்பாளரைத் தான் தெரிவு செய்ய வேண்டும் என்ற ஒரு புதிய ஆவேசம் பிறந்ததே அதனால் திடீரென்று 6000க்குமதிகமாக வாக்குகள் பெருகினவே, அதன் எதிரொலி என்ன? இந்த 1970தேர்தலில்மார்ட்டினின் அற்புத வெற்றிதான் அப்பப்பா! மார்ட்டினுக்கு எவ்வளவு பெரிய செல்வாக்கு! மார்ட்டினை இனி எவராலும் யாழ் நகரில் அசைக்கவே முடியாது. எதிரிகளே வியக்கும் வெற்றி அது நிச்சயம்.

ஆலாலு வெற்றி !



கிளிநொச்சிக் கிராமங்கள் தோறும் 'ஆலாத்தி' சுற்ற ஆயத்தமாகிவிட்டன. ஏன்? அடலேறு ஆலால சுந்தரத்துக்குத்தான். அவர்கள் ஆச்சரியப்பட்டு இதைச் செய்யவில்லை, தமிழரசுக் கட்சியின் ஆலால சுந்தரம் தான் கிளிநொச்சியில் வெல்ல முடியும், வெல்ல வேண்டும் என்பது அவர்களுக்கே தெரிந்த போது ஆச்சரியம் எதற்கு? ஆலாலுவின் வெற்றி மறுமலர்ச்சி இளைஞரின் வெற்றி தான்.

'ஜெய' வெற்றி !

உடுப்பிட்டி இம்முறை தீர்க்கமான முடிவு செய்துவிட்டது. ஒற்றையாட்சித் திட்டத்தால் தான் இத்தனை துன்பங்களும் பாகுபாடுகளும் என்று. அதனால் தான் சமஷ்டிக் கொள்கையை ஆதரிக்கும் ஜெயக்கொடி அவர்களையே தெரிவு செய்வதாக முடிவெடுத்து விட்டார்கள். அரசியல் திட்டமே மாறினால் தான் தமிழர் நிலையும் மாறும். அவை மாற 'பழையவர்' மாறித்தானே ஆகவேண்டும். ஆமாம் புதிய ஜெயக்கொடியின் வெற்றிக் கொடி அதோ பட்டொளி வீசிப் பறக்கிறது.

அழகர் வெற்றி !

நிதானமான வெற்றி. அமைதியான வெற்றி! நிரந்தரமான வெற்றி. மன்னார் மக்கள் அழகக்கோனைத் தான் ஆதரிப்பார்கள் என்பது எப்போதோ தெரிந்தது தான். ஆனால் இத்தனை ஆயிரம் அதிகப்படி வாக்குகளைத் தர முன் வருவார்களென்று நம்புவது வியப்பாயிருக்கிறது. இது அவர்கள் சமஷ்டிக் கொள்கைகளை எப்படி நம்புகிறார்கள் என்பதையே காட்டுகிறது.



முடிசூடாமன்னர்வெற்றி



தமிழுணர்ச்சிக்குப் பேர்போன கிழக்கிலங்கைத் தலைநகரில் முடிசூடா மன்னர் தானே எப்போதும் மன்னர்! மட்டுநகரில் எழில் தமிழ் ஆளர் இராசதுரைக்கு வெற்றிவிழா நடக்காத நாளே இல்லையே! ஆம்! அதோ இளைஞர்கள் இப்போதே திரள் திரளாய் 'இராசதுரை' வாழ்க என்று கூத்தாடத் தொடங்கிவிட்டார்கள்! அவர்களுக்குத் தான் எத்தனை மகிழ்ச்சி...! தங்கள்! அண்ணனின் வெற்றியில் எத்தனை பேரின்பம்! அண்ணன் வெற்றி பெற்று புன்முறுவலோடு தம்பிகளைப் பார்த்து நன்றியோடு ஓர் இனிய சிரிப்பை அவிழ்த்து விடுவானே... அந்தச் சிரிப்பு மலரும் நிமிடத்தை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறார்கள் தம்பிகள்!

மாணிக்க வெற்றி

ஆனைக்குப் பின்னே போனவர்களையா இன்று தமிழன் ஆதரிப்பான்? என்ன கதை ஐயா இது! தமிழினத்தை அழிக்கும் யு. என். பி வேட்

(2-ம் பக்கம் பார்க்க)

தலைமை தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# சுதந்திரன்
SUTANTIRAN

## குருமகா சன்னிதானத்தின் அருள்வாக்குப் பலிக்கட்டும்!

பட்டிப்பளையாற்றைக் கல்லோயாவாக்கித் தமிழ்நாடாம் அம்பாறையைச் சிங்களப் பிரதேசமாக்கி, எங்கள் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடித்த தமிழ்நாட்டை, எம் அன்னையர் தோன்றி மழலைகள் பேசி அறிந்த நாட்டை, அவர் கன்னியராகி நிலவினிலாடிக் களித்த தமிழர் பிரதேசத்தைச் சிங்களப் பிரதேசமாக்கிய சிங்கள ஆக்கிரமிப்பாளருக்கு வெண்சாமரம் வீசி, ஐந்தும் அடக்கிய ஆமையால்' உதடுபிரியாத ஊமையாய், அமைச்சராய் வீற்றிருந்தீரே,


சிறிய சின வேங்கையைச் சிறுசுளகால் எதிர்த்த செந்தமிழ் நங்கையைச், செவ்வாயில் பால்மணமும், சிறுகையில் வேலும் தாங்கி வீரக்களம் சென்ற சிறுமகனைத், தாய்த் தமிழ் நாட்டை விடுத்து, இலங்கை வந்து உழைத்து உருக்குலைந்த தாய்நாட்டுத் தமிழனைக் கலங்கக் கதற நாடற்றவனுக்கிக் கொடுமை இழைத்தீரே,

சிங்களத்தை ஒரு அரசகரும மொழியாக ஆக்கித் தமிழை நடுத்தெருவில் நிறுத்தித், தமிழினத்தின் வேலை வாய்ப்புக்களை மறுத்துத் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களைக் கொள்ளையடித்து இராணுவத்தையும் காவல் துறையையும் கொண்டுதமிழரை நொறுக்கி இந்துவைப் பௌத்தனுக்கித் தமிழனைச் சிங்களவனுக்க முயலும் பௌத்த சிங்கள வெறியைத் தடுக்கக் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளில் தமிழினம் அவ்வப்போது பொங்கி எழுந்து செங்குருதி சிந்தியபோது தலையே காட்டாது அடங்கி, ஒடுங்கி மடங்கி இருந்தீரே,

இதற்கெல்லாம் உமக்குப் பரிசு தரவேண்டாமா?

மே. 27ம் நாள், இப்போது உம்மிடமுள்ள மூன்று ஆசனங்களையும் பிடுங்கிக்கொண்டு காவியும் கமண்டலமும் அளித்துக் கௌரவிக்கத் தீர்மானித்துள்ளோம். சமீபத்தில் இலங்கை வந்து சென்ற குருமகா சன்னிதானத்தின் அருள்வாக்குப்படி நீர் துறவியாக இனித்தடையில்லை.

—நயினை—சிவம்




"தூங்கர சங்கர சம்போ"

# வாக்குரிமை எமது குடியுரிமை!

## அதை எல்லோரும் பிரயோகிக்கவேண்டும்

### தமிழரசு வேண்டுகோள்!

மக்களை, மக்களே ஆள்வது தான் சிறந்த ஜனநாயகம் என்பது உலகத்தின் கருத்து. இதன் சரியான விளக்கம் ஒவ்வொரு குடிமகனும் தன்னைத் தானே ஆளவேண்டும் என்பதுதான். சமஷ்டிக் கொள்கையின் குறிக்கோள் இதுதான்.

ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தான் ஆளவேண்டுமானுல் அவன் தன் வாக்கை கட்டாயம் பாவித்தே ஆகவேண்டும். நம்மை, நம் மொழியை, நம் நாட்டை, நம் இனத்தை எல்லாம் நிர்ணயிப்பது ஒரு நாட்டின் அரசு என்றுல், அவ்வரசில் நாமும் நிச்சயம் பங்கு கொண்டால்தான் 'நம்மை நாமே' ஆளமுடியும். அதற்கு நம் வாக்கு இன்றியமையாதது. அந்த வாக்கு இன்றைய நம்மை, எதிர்கால நம் சந்ததியையும் கூட வழி நடத்தப் போகின்றது.

ஆனுல் எல்லோரும் தமது பொன்னுன வாக்குகளைப் பிரயோகிக்கின்றனரா?

நிச்சயமாக இல்லை.

பல்லாயிரக் கணக்கான மலையகத் தமிழ் மக்கள் எந்த வாக்குரிமை இன்றி அவலப்படுகின்றுர்களோ — அதே வாக்குரிமையை நாம் வைத்துக்கொண்டும் பிரயோகிக்காமல் தமிழினத்துக்கே ஒரு மாபெரும் துரோகத்தைச் செய்கின்றேம் என்பதை மறக்கக் கூடாது.

வாயளவில் அரசியல் பேசிவிட்டால் மட்டும் போதாது நமது வாக்குரிமையைப் பாவிப்பதன் மூலம் அவ்வுரிமையைப் பெறவேண்டும்.

நம் சகோதர மக்கள் 'நம் கையில் வாக்குச் சீட்டிருந்தால் இந்நாட்டின் தலையெழுத்தையே மாற்றிவிடலாமே' எனத் துடித்து ஏங்கும்போது, நாமோ அந்த வாக்குச் சீட்டை வைத்துக் கொண்டும் பாவியாது போனுல் அதைவிடப் பாவச் செயல் வேறுண்டா?

மேற்கத்திய நாடுகளில் குடியுரிமைகளைப் பாவிப்பதைத் தமது தலையாய கடமையாகக் கொள்கின்றுர்கள். இது சமுதாயத்தினரின் தவிர்க்கமுடியாத கடமை.


ஆனுல்—

வட மாகாணத்தில் 1960 மார்ச் தேர்தலில் மொத்த வாக்காளர் 31 2692 பேர். இவர்களில் 81636 பேர் வாக்களிக்கவில்லை. 1960 ஜூலையில் 312692 பேரில் 10 6606 பேர் வாக்களிக்கவில்லை. 1965ல் 383393 வாக்காளரில் 106304 பேர் வாக்களிக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் 1960 மார்ச் தேர்தலில் 160432 மொத்த வாக்காளரில் 38781 பேரும், 1960 ஜூலையில் 160432 பேரில் 39833 பேரும், 1965ல் 216377 பேரில் 51972 பேரும் வாக்களிக்காதிருக்கின்றனர்.

உரிமை வேண்டும், கௌரவம் வேண்டும், சம அந்தஸ்து வேண்டும் என்று போராடும் நாம் அதற்கு ஆதாரமான நம் வாக்குகளை நிச்சயம் பாவிக்கவே வேண்டும்.

எனவே மே 27ம் திகதி வட, கிழக்கு மாகாண எல்லாத் தமிழ் பேசும் மக்களும் தவருது நம் இயக்க வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும்படி தமிழரசுக் கட்சியினர் கேட்டுக்கொள்கின்றுர்கள்.



## சிறீ எதிர்ப்பு போராட்டத்தில் சிங்கத் தமிழன் இராசதுரை

தணல் இருக்கும் படி சூடாய்
தமிழ் முழக்கும் இராசதுரை பேர்கேட்டால்
குலை நடுக்கம் பகைவருக்கு
உடன் பிறக்கும்! தமிழ் இளைஞர்
படை பறக்கும் படி அவன் நா
இடிமுழக்கம் எழுப்புவதால்
தலை இடிக்கும் ஆட்சியிலே
குடியிருக்கும் மாற்றுர்க்கு!
மீன்பாடும் தேனுட்டு வீதியிலே
வண்டிகளில் தமிழ் எழுத்தை
தான் பொறித்து தலை நிமிர்ந்து சிரிக்கின்றுன்
கூனடைந்த தமிழினத்தின் கூன் நிமிர்த்தும் தமிழ் வீரன்!

தேன் சொட்ட தீயுமிழ் தமிழ் வீசும்
மட்டுநகர் முடிசூடாக்
கோன் ஆன தமிழ் இனத்துக் குரலழகன்!
பக்கத்தே நிற்கின்றுர் பட்டிருப்பு
மக்கள் நமக்களித்த மானத்தமிழ்த்தலைவர்
இராசமாணிக்கம்
இலட்சிய மறச்சிங்கம்!

## அரைச் சபாநாயகரின் தமிழ்ப் பற்று

தமிழரசுக்காரரான காலஞ் சென்ற வீ. ஏ. கந்தையா ஒருநாள் சனப்பிரதிநிதிகள் சபைக்கு தலைமை தாங்கினுர். சபை அலுவல்களை தமிழில் நடத்தினுர்!

ஆனுல் உடுப்பிட்டி சிவசிதம்பரம் அரைச் சபாநாயகர் பதவியை அலங்கரிந்தார் ஒருநாளாவது தமிழில் அலுவல் நடத்தவில்லை! இதுதான் தமிழரசுக்காரனுக்கும் தமிழ் காங்கிரஸ்காரனுக்கும் உள்ள வித்தியாசம்!

## கொழும்பு மத்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதுமை இல்லை.' இவ்வாறு கொழும்புஇஸ்லாமியகலாச்சார மண்டபத்தில் பேசும் போது கெனமன் குறிப்பிட்டிருக்கிறுர்!

இதிலிருந்து தமிழ் மொழியை அழித்துத் தமிழரைச் சிங்களவராக்கிவிடுவதே கம்யூனிஸ்டுகளின் திட்டம் என்பது புரிகிறது.

இதை எந்தத் தன்மானத் தமிழனும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே தமிழ் வாக்காளர்கள் எக் காரணம் கொண்டும் கம்யூனிஸ்டுகளை ஆதரிக்கக் கூடாது.

தமிழர்கள் சிங்களம் படிக்கத்தான் வேண்டும் என்று ஆணவத்தோடு கூறும் கம்யூனிஸ்டுகளையும், பீட்டர் கெனமனையும் தமிழர்கள் புறக்கணிப்பது நியாயமான செயலாகவே இருக்கும். தமது தாய்மொழியையும், உரிமைகளையும், சுய கௌரவத்தையும் தமிழ் பேசும் மக்கள் மதிப்பவர்களானுல் அவர்கள் நிச்சயம் கெனமனை ஆதரிக்கக் கூடாது!

இவ்வாறு அப் பிரமுகர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழினம் தலைநிமி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மலையகத் தோட்டத் தொழிலாளரான- இந்திய வம்சாவழியினரின் குடியுரிமை, மொழியுரிமை, அரசியலுரிமை, வாக்குரிமை கட்காக அல்லும் பகலும் பாடுபடுங் கட்சி தமிழரசுக் கட்சியே.

தமிழரசுக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான திரு. வி. என். நவரத்தினம் அவர்கள் ஒரு கடமை வீரர். மலையகத் தொழிலாளருக்காக தமது சாவகச்சேரி தொகுதிப்பணியுடன், தொழிற் கழகப்பணியையும் ஏற்றுக் கொண்டு உழைத்து வருகின்றுர். சமஷ்டி கிடைக்கும் வரை— தமிழுக்கு நிலையான அந்தஸ்துப் பெறும் வரை தாடி வளர்க்கும செம்மல் ஆவர்.

ஈழத்தில் தமிழர்களின் எதிர்காலம். சுபீட்சம், நல் வாழ்வு எல்லாம் இலங்கை வாழ் தமிழ்ப் பெருங்குடி மக்கள் தமிழரசுக் கட்சியின் கரங்களிலே ஒன்ருக இத் தேர்தலிலே ஒப்படைப்பார்கள். ஒப்படைக்க வேண்டும் அப்போது தான் தமிழும் தமிழர்களும் ஈழத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியும்!

'சங்கொலி'—5-5-70

## வன்னி மக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுச் சிங்களத்தில், பேசி தலைமயிராலும் பிரஷ் செய்து அவருக்குச்செருதபுத்துடைக்கத் தயாராயிருக்கும் சிவசிதம்பரமா வன்னி நாட்டுக்கு எம்.பி. யாவது? முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அதிபாக திரு. வ. பொன்னம்பலம் இருந்த போது, வன்னி நாட்டு வேந்தன் பண்டார வன்னியனுக்கு விழா எடுத்துக், கற்பனைக் கண்ணில் அவனைக் கண்டு, ஓவியமும் எழுதுவித்து ஊரறியச் செய்தபோதுதான் திருவாளர் சிவசிதம்பரத்துக்கு முதன் முதலாக பண்டார வன்னியனின் கதையே தெரிய வந்தது. இன்றே, அவர் பேச்சு, மூச்சு எல்லாமே பண்டார வன்னியனுய் ஆச்சு! "என்னே! அவர் வன்னியன் பக்தி" என விஷயமறிந்தவர்கள் பெருமூச்சு விடுகிறுர்கள். தமிழரசு வேட்பாளர் எக்ஸ். எம். செல்லத்தம்புவைப் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுத்துச் சிங்களப் பம்பரமான சிவசிதம்பரத்துக்கு மொட்டை தட்டி மஞ்சள் சீலை கட்டி பௌத்த சந்நியாசியாக்க வேண்டுமென்று வன்னி மக்கள் தீர்மானம் செய்துள்ளனர்.

இப் பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 27-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்